

தமிழர் திருநாள் பொங்கல் விழாவையொட்டி, தமிழர்களின் கலைத் திறனைக் காட்டும் பாரம்பரியக் கலைகள் அரங்கேறும் 'சென்னை சங்கமம் – 2026' நிகழ்வுக்கான அழைப்பிதழை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் அவரது இல்லத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.1.2026) முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், 2025–ஆம் ஆண்டுக்கான "பேரறிஞர் அண்ணா விருது" அறிவித்தமைக்காக சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

### 2025ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது

# மரபுத்தமிழ் - ஆய்வுத் தமிழ் - படைப்புத்தமிழ் - மூன்று விருதுகள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜன.15 -**

**பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ் நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புல மைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.**

அவ்வகையில் மரபுத்தமிழ், ஆய் வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய மூன்று வகைப்பாட்டில் அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி 3.6.2021 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்க ளால், தமிழ் எழுத்தாளர்களை ஊக்கு வித்து சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி என்ற விருது உருவாக்கப்பட்டு தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டு, மரபுத்தமிழ், ஆய்வுத் தமிழ், படைப் புத்தமிழ் ஆகிய வகைப்பாட்டில் 2021ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வரிசையில், **2025ஆம் ஆண்டிற் கான இலக்கிய மாமணி விருதுகளில் மரபுத் தமிழ் வகைப்பாட்டில்** "உலகின் பல்வேறு நாடுகளில் செம்மாந்த இலக்கிய உரை களை நிகழ்த்தி வருபவரும் தினமணி நாளிதழில் ஞாயிறு தோறும் கம்பன் தமி ழமுதம் என்னும் தலைப்பில் ஆழ்ந்த கட் டுரைகள் எழுதியதோடு தொடர்ந்து பல் வேறு இதழ்களில் எழுதி வருபவரும் தமிழ்நாட்டில் பல இளைஞர்களுக்கு மேடைப் பேச்சாற்றலுக்கான நல்வழிகாட் டியாகவும் உந்து சக்தியாகவும் திகழ்ந்து வருபவரும் சென்னை, கம்பன் கழகத்தில் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றிய வரும் மாபெரும் தமிழறிஞர்களின் வழி காட்டுதல்களோடு இலக்கியப்பணியாற்றி வரும் **இலக்கியச் சுடர் த. இராமலிங்கம் (வயது 68)** அவர்களும்;

ஆய்வுத் தமிழ் வகைப்பாட்டில் இலக் கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்க ளால் 1959இல் தொடங்கப்பட்ட தாமரை இலக்கிய இதழின் ஆசிரியராக கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேல் பணி யாற்றியவரும், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரும், சமூக விழிப்பு கொண்ட எழுத்துப் பணிகளை மேற் கொண்டு வருபவரும், சீர்திருத்த மேடைப் பேச்சாளராக அணி செய்பவ ரும், "வீழ்வேன் என்று நினைத்தாயோ?, "தீக்குள் விரலை வைத்தேன்", தமிழ் நாடு பிறந்தது (தொகுப்பு)" உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவ ருமான எழுத்தாளர் **சி.மகேந்திரன் (வயது 73)** அவர்களும்;

**படைப்புத்தமிழ் வகைப்பாட்டில்** முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆசிரிய ராக இருந்த 'நம்நாடு' வார ஏட்டில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியதோடு, வைகறை முரசு இதழில் தொடர்ந்து எழு தியவரும் தென்காசி திருவள்ளுவர் கழ கத்தில் வள்ளுவம் தொடர்பான தொடர் சொற்பொழிவுகளை ஆற்றி வருபவரும், திராவிடச் சிந்தனையில் ஆழ்ந்து பல படைப்பு நூல்களை வெளியிட்டதோடு, தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு அறிஞர் களை அழைத்து இராசபாளையத்தில் அருமையான இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதை தொடர் பணியாக செய்யும் அறிவுத்திலகமான விருதுநகர் மாவட்டத் தைச் சேர்ந்த **இரா.நரேந்திரகுமார் (வயது 74)** அவர்களும் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர். இலக்கிய மாமணி விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொ ருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம், ஒரு சவரன் தங் கப்பதக்கம், தகுதியுரை ஆகியவை வழங் கப்பெற்று, பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப்பெறுவார்கள்.

இவ்விருதுகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திருவள்ளுவர் திருநாளான 16.01.2026 அன்று வழங் கப்படவுள்ளன.




முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று முன்தினம் (13.01.2026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக "பாரதிதாசன் அறிவுலகம்" நூலகம் அமைக்க கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் எஸ்.பாலரவிக்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் எஸ்.தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.


